641

641

உ

கடவுள் துணை.

ஆடிமாதம் அரசு சுற்றும்

அலங்காரச் சிந்து.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 AUG 1933
MADRAS

இவை

தென்னாற்காடுஜில்லா விருத்தாசலம் தாலுக்கா

மேலப்பாலையூர் கீழவீதி

நாயத்தொண்டமான்

கே. வேலாயுத படையாசி குமாரர்

கோவிந்தசாமி படையாக்ஷி

அவர்களால் இயற்றப்பட்டு

சி... பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

...33 [0—0—6

Q25:4M4
N33
125205

சென்னை-600 005.
175705

உ

விவாஹமுடிந்த ஆண் பெண்

அரசுசுற்றும் அலங்காரச்சிந்து.

வெண்பா.

சீர்புகழும் கங்கை காவேரியாற்றிற்கு வடபாகத்தில்
பார்புகழும் திருமணிமுத்தாநதி சுவேதநதி பக்கமாம்
ஸ்ரீமுஷ்ணம் நகர்தனில் அருள் பெற்றவருக ரூபமேற்
[சிந்து யான்பாட
செப்பவே தொப்ப யெனும் கற்பக பிள்ளையாற் காப்பு.

நைனேஜி என்றமெட்டு

1. ஆடி மாதம் திருக்கல்யாணம் நாடிப்போகும் பாதே
வாடி இப்போ பக்கத்திலே திருச்சிநகர் பாதை
ஸ்ரீமுஷ்ணம் கேம்பு இதுபெரியபஜார் லாம்பு

2. ஆடி திங்கள் அமாவாசை தேடிவாரூர் பாதே அடி
அரசு சுற்ற எண்ணங்கொண்டு அவனியெல்லாம்
ஆனந்தக்கல்யாணம் உடன் ஆனதினால்கேளுர் [கோ

சின்ன சேலம் பெரிசேலம் சீர்புகழும் திண்டிவனம்
ஸ்ரீமான்களும் ரயிலேரி தேடிவாரார் மதே அடி
ஜோடிகளும் கூடி இதைத்தேடி வாறார் கோடி

4. ஆழி சிதம்பரமாம் ஆடுதுறைக் கும்பகோணம்
அறியலூரு திருத்தணிகை பிரியமுடன்ஜோடிகளும்
ஆக இவர் கூடி அமாவாசை தேடி

5. பெண்டுகளும்பிள்ளை வரம் பேர்புகழும்வாங்க இதை
கண்டு வறார் கலியுகத்தில் கஷ்டமிக நீங்க
ஜோடிக்கணவனோடு இங்கே சுற்றுவார்த் தன்னோடு

6. மாலைபிட்டுமுன்னோர்கள் சுற்றுவதைச்சொன்னேன்
மதிகெட்டு போகாதிங்கோ மாமயிலேக்கண்ணேயடி
மறந்திடாதே தேசம் இதை மறந்துவிட்டால்
தோஷம்

7 ஆ நாட்டுபெத்திரிசேலை யெடு தங்கரேக்கு ரவிக்கைபோடு
சபான் தோடு சங்கிலிபோடு சரசமுடன் எந்தனோடு
ஜனங்கள் அங்கே கூடும் நீ சல்தினிலே வாரும் அடி

8. பெ காப்புச்சங்கிலி கொசலுசுபோடு கண்ணுக்கேற்ற மையு
காதுக்கிசைந்த கடுக்கன் போடு கண்டிசிலோன் [மிடு
[வேஷ்டியெடு
சல்திவாங்கபோவோம் அந்தசாமி பாதம் காண்போம்

வளையற் சிந்து மெட்டு

1. ஆ. ஸ்ரீமுஷ்ணம் தேடிவந்தோம் தேவியரேமானே அடி
தேன்மொழியே தேனே இது தெய்வசபைதானே
இதோ தெரியுதுபார் சர்க்கரைகுளம் தீர்த்தமிதுதானே

2. பெ மாமயிலே ரத்தினமே மங்கையரே பாரும் தேச
மானிடர்கள் யாரும் இந்த மருத்துவத்தின் சீரும்
மகாமுனிவரருளினாலே மகதே ஸ்நானம் செய்வோம்

3. ஆ. முந்தாணியை முணிந்துக்கொண்டு மூழ்கிடுவோம் [தோதாமுன்
சித்திரையில் மாதே தெற்பம் நடக்குமடிகோதே அடி
முக்கியத்தை சொல்லுகிறேன் மூழ்கிவாடி மாதே

4. பெ தேங்காய் பழம் சர்க்கரை செல்வியறே பாங்கு மஞ்சன்
சிகப்பு வத்தி வாங்கு இந்தச்சீருடனே ஸ்டாங்கு அடி
சீக்கிரத்தில் இருவருமாய் சென்றுபாதம் காண்போம்

5. ஆ. பஞ்சவர்ண ரஞ்சிதமே பாவையரேக்கேளும்
பாருலகில் சீரும் பரமன் பாதம்தேடி யாரும் அடி
பக்ஷமுடன் தேடிவரார் ஆடிமாதந்தோறும்

6. பெ வனக்குயிலே பெண்மயிலே வந்துவாம் கேளும் பின்பு
மைந்தன்சிலன்வேணும் இப்போ மனதுடனேக்கேளும்
இந்தவாக்கு நிறைதவறாமல் பாக்கியமேக் கேளும்

175705

7. ஆ. சிர்தைதிடம் நாமிருவர் சென்றிடுவோம் மெள்ள
அடி தேவியரே நல்ல இப்போ தெரியுதுபார் உள்ளே
சீக்கிரமாய் காணிக்கை செலுத்தவேணும் முல்லே

8. பெ அவனியெல்லாம் புகழும்பெற்ற அரசமரம் பெண்ணே
சரசமுள்ளக்கண்ணே இதோஅரசடியில்முன்னே அடி
[இதில்
அமைத்திருக்கும் நவக்கிரகமேஅடி வணங்கும்பெண்ணே

9. பெ நெரிக்குதையா ஜனங்களெல்லாம் நேசமுள்ளமாமா
வெகு பாசமிருதாமா இங்கேநேரம் செய்யலமா என்
நெஞ்சம் கலங்குதையா கொஞ்சதூரம் மாமா

10 ஆ. பத்தினியே ரத்தினமே சித்தங்கலங்காதே அடி
நத்திச்செல்வோம் மாதே தேவர் முத்தியான போதே
பாராளும் பகவானைத் தோத்தரித்தோம் மாதே

11 பெ மன்னவரே யென்கணவா மாலையிட்ட மாமா காசு
மாலைகளும் பூமா ஒருமோசம் போகலாமா என்
மங்கையற் கேற்றபொருள் வாங்கிச் செல்வோம் மாமா

12 ஆ. ஆரணங்கு பெண்மயிலே ஆசையுள்ள மானே அதோ
யானைக்குளம் தானே சனியீஸ்பர மடந்தானே அடி
அஞ்சாதேக் கொடுங்கோர்க் கபட மதமானே

13 பெ. ஆனந்தகிரி காப்பிக்கொட்டை அரைவீசை வாங்கு
[கொஞ்சம்
அய்யோ மாமா வாங்கு நம் மெய்யுடலும் ஓங்க நமக்
கரசாள வேணும் பொருள் சொல்லிவாரேன் கேளும்

14 தாஸன் பாலசிகாமணி தமாஷான பாட்டு அது
தாளம் மேளம் போட்டு சொந்த தங்கமெட்டலும் கேட்டு
இங்கே டாலடித்து கேழ்க்குதுபார் தம்மடி ஆறுதான்
நீட்டு

அந்தத் தெருவிலே ஆறுகன்னி என்றமெட்டு.

1. பெ மாமா மரிக்கொழுந்து வாங்கிக்கொடு ஒரு
மல்லிகை முல்லை பொட்டணம் வாங்கியெடு ஓய்
சீர்மை சிலுக்குப்பட்டு தையுங்காணும் ஒரு
சின்ன சப்பான் ரவிக்கை கேளுங்காணும்

2. ஆ. காரிக்கன்மல் ஸப்பான் கலிசாக் கச்சே கண்ணே
கைப்புடனே சிகப்பு ரோஸ் வாங்கித்தாறேன் அடி
சுத்த ஜரிகைபேட்டு சுங்கடி தங்கம்
சுதேசி டோரியா கொஞ்சம் கொஞ்சம்

3. பெ சயிசுடனே நயிஸ் மல்லு யெடுத்துக் கட்டுமாமா
சம்பங்கி வாசனையை வாங்கி வீசு
மலையாளம் கோயம்புத்தூர் நீலகிரி மாமா
மைசூர் ரோஸ்சோப் வாங்கும் மாமா

4. ஆ. பம்பாய் வளையலப்பர் தங்கம் தங்கம் அடி
பரிக்குதடி யென்கண்ணே சிங்கம் சிங்கம்
யானைதந்தம் சீப்புகளும் வாங்கித்தாறேன் அடி
ஆள்மிரட்டிக் கண்ணாடி பார்த்துக்கோடி

5. பெ வெஜிடால்கள் கோல்டார்।கார்பாலியும் நல்ல
விதமான வாஷ்வெல் ஸோப்புகளும்
ஸாண்டல்வுட் ரோமசங்கார ஸோப்பு நீ
சல்தியிலே வாங்குங்கோ போவோம் போவோம்

6. ஆ. இவ்விதமான ஸோப்பு இங்கே இல்லை அடி
இருப்பிடத்தைச் சொல்லுகிறேன் முல்லை முல்லை
ஆங்கிலோ ஜெர்கன் ட்ரேடிங் கண்ணேக்குட்டி அது
ஆகுதுபார் கம்பெனி கள்ளிக்கோட்டை

7 பெ. மிட்டாய் பூந்தி வடை லட்டு லட்டு மாமா
துட்டு அதிகமாச்சு நீட்டு நீட்டு
டோப்பான் கமிலிமா வாங்கு மாமா இப்போ
டாலாய் எலெக்டர் பிடியும் மாமா

8. ஆ. மாலைமணி ஏழாச்சு கண்ணேக் கண்ணே அடி
இயலாதடி உன்ஜாலம் பெண்ணே பெண்ணே
சாலையிலே மெட்ராஸ் மோட்டார்காரு அடி
ஜாட்ஆகி போகுதுபார் யேரு யேரு

முடுக்கு.

9. அரைமுந்தி முழுமுந்தி அடுக்கு சரிகைசேலை
ஆனந்தப் பப்பளி ஆடுமயில் சேலைகளும்
மதுரைச் சிலுக்குச் சீட்டி மஞ்சபட்டுத் தாவணியும்
பெலுக்குது பார்த்துக்கோடி சிங்காரத்தங்கம்
செலிக்குது கேட்டுக்கோடி

10. ஜரிகைபேட்டு ஜரிகைமுந்தி சாயசுங்கடிகளும்
ஸப்பான் பூரோஸ்களும் வெங்காயத்தோல்
சிலுக்குகளும் சீட்டி பவிக்கைகளும்
சின்ன சின்ன ஜோடிகளும் வடக்கித்தி கண்ணுகளும்
வந்திருக்கு கூட்டத்திலே சிரிக்காதே பார்த்துலாடி
சிங்காரதங்கம் சீர்கை கார்யேரி போடி

11. சபான்குகையடி சின்ன பெண்ணே நாம்
சல்தியிலே வந்துவிட்டோம் கண்ணே கண்ணே
இளவரச சுற்றிவந்தோம் பெண்ணே பெண்ணே
இதை இக்ஷணமே அச்சிவிட்டு சொன்னேன் சொன்
னேன்

12 நான்கோவிந்தராசு என்ற முதல் பெயரு எனக்கு
கொடுத்ததே சுவாமியும் இன்னொருபெயரும்
பக்குவத்தை சொல்லுகிறேன் கேளும் கேளும்
பாலசிகாமணி என்று இரண்டாம் பெயறு

முற்றிற்று.

சென்னை-600 008.
125705